**அசல் வழக்கு எண் : 112/2019**

**நாள்: 06.08.2025**

**வாசா.1 செல்வம், த/பெ. மாதையர் (எ) ஜடையர்**

1–ம் வாதி ஆஜர். வாதிகளின் வழக்கறிஞர் ஆஜர். 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகள் ஆஜர். 1 முதல் 4–ம் பிரதிவாதிகளின் வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1–ன் குறுக்கு விசாரணை:**

1. எனக்கு இவ்வழக்கின் சொத்து விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்திற்கான புல எண்.101/1 ஆகும். அதன் விஸ்தீரணம் 3 ஏக்கர் 12 சென்ட் ஆகும். நான் தற்போது கூறும் வழக்கு சொத்து விவரமானது தவறானது என்றால் சரியல்ல. தாவா சொத்தானது எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. 3.12 ஏக்கர் என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது.
2. நான் தாக்கல் செய்த எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் பத்தி 3–ல் 'வழக்கு சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டு எங்கள் அனுபவத்தில் இருந்து வந்த சொத்தாகும்' என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது வழக்குரையிலோ அல்லது எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்திலோ தாவா சொத்தானது என்னுடைய அனுபவத்தில் இருந்து வருகின்ற சொத்து என நான் எங்கும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.
3. வழக்கு சொத்தை கிரையம் பெறப்பட்டதாக சொல்லப்படும் எனது அண்ணன் மாதேஷ்வரன் இவ்வழக்கில் வாதியாக இல்லை என்றால் சரிதான். எனது தாயார் கிரிமல்லம்மாளுக்கு நாங்கள் மொத்தம் 3 மகன்கள் மற்றும் 2 மகள்கள் ஆவோம். எனது உடன்பிறந்த சகோதரர் சேகர் என்பவரை தவிர்த்து, மற்ற சகோதர சகோதரிகள் எவரும் இவ்வழக்கில் தரப்பினராக இல்லை என்றால்

சரிதான். புல எண்.101/1–ல் 1.56 ஏக்கரை கிரையம் பெற்ற எனது தாயார் கிரிமல்லம்மாளின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயார் கிரிமல்லம்மாள் மற்றும் என் அண்ணன் மாதேஷ்வரன் ஆகியோர் கிரையம் பெற்ற சொத்துக்களை நாங்கள் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டதாக நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன். மேற்படி வாய்மொழி பாகமானது எப்போது ஏற்பட்டது என நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

4. புல எண்.101/1–ல் அமைந்துள்ள நிலம் தொடர்பாக நானும் இவ்வழக்கின் 2–ம் வாதியான எனது சகோதரர் சேகர், எனது அண்ணன் மாதேஷ்வரன் மற்றும் எனது தாய் கிரிமல்லம்மாள் ஆகியோரும் பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரியல்ல. நான் 3–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பாகபிரிவினை பத்திரம் நானும் இவ்வழக்கின் 2–ம் வாதியான எனது சகோதரர் சேகர், எனது அண்ணன் மாதேஷ்வரன் மற்றும் எனது தாய் கிரிமல்லம்மாள் ஆகியோரும் ஏற்படுத்தி கொண்ட பத்திரம் என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் உள்ள C schedule–ல் புல எண்.101/1–ற்கான சொத்து விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. நாங்கள் 14.10.2010 அன்று மேற்படி பாகபிரிவினை பத்திரத்தை ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்தும், பிற சொத்துக்களை பொறுத்தும் 14.10.2010 அன்று ஏற்படுத்தபட்ட பாகபிரிவினை பத்திரத்தை குறித்து நான் எனது வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றாலும், மேற்படி பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். நான் 14.10.2010 அன்று ஏற்படுத்தப்பட்ட பாகபிரிவினை பத்திரத்தை மறைத்து வாய்மொழிபாகம் என

வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். **14.10.2010 அன்று எங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே ஏற்படுத்தப்பட்ட பாகபிரிவினை பத்திரமானது பிசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.**

6. புல எண்.101/1 ஆனது எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் புல எண்கள்.101/A, 101/B, 101/C, 101/F, 101/E என உட்பிரிவுகளாக உள்ளது. புல எண்கள்.101/A மற்றும் 101/B யார் பெயரில் உள்ளது என்றால் தார்சாலைக்காக உட்பிரிவாகியுள்ளது. புல எண்கள். 101/A, 101/B தார்சாலைக்காக உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் உட்பிரிவு செய்யப்பட்ட காலத்திலேயே எனக்கு தெரியும் என்றால் சரிதான். புல எண்கள். 101/A, 101/B தார்சாலைக்காக உட்பிரிவு செய்யப்பட்ட சமயத்தில் அது குறித்து நான் எவ்விதமான ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.
7. புல எண். 101/C அமைந்துள்ள நிலமானது யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரில் உள்ளது. புல எண்.101/F என்பது எனது அண்ணன் சேகர் பெயரில் உள்ளது. புல எண்.101/E ஆனது எனது பெயரிலும், எனது அண்ணன் சேகர் பெயரிலும் உள்ளது. எனது பெயரிலும், எனது அண்ணன் பெயரிலும் ஏற்பட்ட உட்பிரிவுகள் செய்யப்பட்ட காலத்திலேயே எங்களுக்கு தெரியும் என்றால் சரிதான்.
8. எனது பெயரிலும், 2–ம் வாதியான எனது அண்ணன் பெயரிலும் தனி மற்றும் கூட்டுபட்டாவை அனுசரித்து நாங்கள் விவசாய கடன் மற்றும் கூட்டுறவு சங்க கடன் ஆகியவற்றை பெற்றுள்ளோம் என்றால் சரிதான். புல எண்.101/1–ல் நான் மேற்குறிப்பிட்டுள்ள உட்பிரிவுகளை தவிர்த்து வேறு எந்த நிலமும் எங்கள் குடும்பத்தாரின் பெயரில் இல்லை என்றால் சரிதான். எனது அண்ணன் மாதேஷ்வரன் பெயரிலும் உள்ளது.
9. மேற்படி உட்பிரிவுகள் செய்யப்பட்ட சமயத்தில் நாங்கள் யாரும் உடன் இல்லை. ஆனால் மேற்படி உட்பிரிவுகளை ஏற்று கொண்டு தான் நாங்கள்

அந்நிலங்களை அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது பெயரில் உள்ள தனிப்பட்டா மற்றும் எனது அண்ணன் மற்றும் என் பெயரில் உள்ள கூட்டுப்பட்டா எக்காலத்தில் ஏற்பட்டது என்றால் நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின்போது (UDR) ஏற்படுத்தப்பட்டது. புல எண்.101/1–ற்கான பட்டா வேறு நபர் பெயரில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். யார் பெயரில் உள்ளது என்றால் புல எண்.101/2 சந்தியப்பன் பெயரில் உள்ளது. புல எண்.101/2 சந்தியப்பன் பெயரில் உள்ள நிலமானது சந்தியப்பன் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்ட நிலம் என்றால் சரிதான். புல எண்.101/2 சந்தியப்பன் பெயரில் உள்ள நிலமானது சந்தியப்பன் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு நாங்கள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புல எண்.101/1–ன் உட்பிரிவான புல வரைபடம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். புல எண்.101/1–ல் 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளின் பெயரில் உள்ள பட்டாவை (வா.சா.ஆ.5) நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். வா.சா.ஆ.5 ஆனது புல எண்.101/1ல் எனது பெயரிலும், எனது அண்ணன் சேகர் பெயரிலும் தார்சாலையாகவும் உட்பிரிவு செய்யப்பட்ட காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்ட காலத்தில் வா.சா.ஆ.5 குறித்து நான் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் அதற்காக தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

10. வா.சா.ஆ.5 ஆன பட்டாவை ரத்து செய்ய ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் அதற்காக வருவாய்த்துறையில் அடிக்கடி மனு அளித்தேன். நான் அவ்வாறு அடிக்கடி தாக்கல் செய்த மனுவில் எவ்விதமான உத்தரவும் பிறப்பிக்கபடவில்லை என்றால் சரிதான். நான் அவ்வாறு அடிக்கடி தாக்கல் செய்த மனுவிற்கான ஆவணங்களை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் அவற்றை எனது

வழக்கறிஞரிடம் அளித்துள்ளேன். வா.சா.ஆ.5 ஐ ரத்து செய்ய நான் எவ்விதமான மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், மேற்படி மனுக்களை எனது வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

11. வா.சா.ஆ.5 ஆனது வழங்கப்பட்ட காலத்தில் இருந்தே நாங்கள் அதை ஏற்று கொண்டதால் அதனை பொறுத்து எவ்விதமான சட்டநடவடிக்கையும் நாங்கள் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 1 முதல் 4–ம் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.5யை பொறுத்து பிரதிவாதிகளின் குடும்பத்தாருக்கிடையே பாகபிரிவினை ஏற்படுத்தி கொண்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை ஏற்படுத்தபட்ட காலத்தில் இருந்து 1 முதல் 4ம் பிரதிவாதிகள் தான் வா.சா.ஆ.5 சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் நாங்கள் அனுபவிக்கிறோம், அவர்கள் போகிறார்கள் வருகிறார்கள். வா.சா.ஆ.5 சொத்தானது எங்கள் மாட்டுக்கொட்டகைக்கு போகும் வழியாகும். வா.சா.ஆ.5 சொத்தில் நாங்கள் செல்வதை பிரதிவாதிகள் தடை செய்யவில்லை என்றால் அவர்கள் தடைசெய்ததால் தான் நாங்கள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ.5 சொத்தில் 1 முதல் 4–ம் பிரதிவாதிகள் செல்வதை நாங்கள் தடை செய்தோமா என்றால் இல்லை.

12. எங்களின் நிலத்திற்கு தெற்கு மற்றும் கிழக்கு புறங்களில் பிரதிவாதிகளின் நிலம் அமைந்துள்ளது. தெற்கு மற்றும் கிழக்கு புறங்களில் அமைந்துள்ள நிலமானது ஆதியில் சந்தியப்பன் என்பவருக்கு சொந்தமான நிலம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 சொத்தின் வழியாக 1 முதல் 4–ம் பிரதிவாதிகள் மேற்படி சந்தியப்பன் நிலத்திற்கு தான் சென்று வருகிறார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 சொத்தானது தார்சாலையை ஒட்டி அமைந்துள்ளது என்றால்

சரிதான். மேற்படி தார்சாலை வழியாக 1 முதல் 4ம் பிரதிவாதிகள் வா.சா.ஆ.5 சொத்தின் மூலம் சந்தியப்பன் நிலத்திற்கு செல்கிறார்கள் என்றால் சரிதான்.

13. வா.சா.ஆ.5 சொத்து சம்மந்தமாக பிரதிவாதிகள் குடும்பத்தாருக்கிடையே ஏற்படுத்தப்பட்ட பாகபிரிவினை பத்திரத்தை ரத்து செய்ய நான் எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் நான் ஏன் செய்ய வேண்டும். வா.சா.ஆ.5 யையும் மேற்படி பாகபிரிவினை பத்திரத்தையும், நாங்கள் ஏற்றுகொண்டோம் என்பதால் தான் நாங்கள் தற்போது வரை எவ்விதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 சொத்தை எங்கள் குடும்பத்தாருக்கிடையே ஏற்படுத்த பி.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டு பாகம் பிரித்து கொள்ளவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 சொத்தானது 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளின் பெயரில் பட்டாவாக இருந்ததாலும், அவர்களின் அனுபவத்தில் இருந்ததாலும் தான் பி.சா.ஆ.1–ல் பாகபிரிவினை செய்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல.

1 முதல் 4ம் பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சியானது ஒத்தி வைக்கப்படுகிறது.

SARANYA M
Digitally signed by SARANYA M
Date: 2025.08.06 15:14:10 +0530